### கரூர் கூட்ட நெரிசல் பலி வழக்கில்

# சாட்சிகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பீர்!

## உச்சநீதிமன்றம் நியமித்த மேற்பார்வைக் குழுவுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 11-

கரூர் த.வெ.க. கூட்ட நெரிசல் வழக்கில் சாட்சிகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மேற்பார்வைக் குழுவுக்குக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் மனு அளித்துள்ளார்.

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான சி.பி.ஐ. விசாரணையை மேற்பார்வையிட உச்சநீதிமன்றம் நியமித்துள்ள குழுவுக்கு மனு அளித்துள்ளார்.

அதில், 10.07.2026 அன்று முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் கரூருக்குச் சென்று த.வெ.க. கூட்ட நெரிசலில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோரின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையிலான அரசுப் பணிக்கான பணி நியமன ஆணைகளை வழங்க உள்ள நிலையில், நடைபெற்று வரும் விசாரணையில் சாட்சிகளாக உள்ள அந்தக் குடும்பத்தினர் மீது எந்தவிதமான செல்வாக்கும் செலுத்தப்படவோ, அவர்களுடன் தலையீடு மேற்கொள்ளப்படவோ கூடாது என்பதற்கான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும் சி.பி.ஐ.யும் மேற் கொள்ளுமாறு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.



கடந்த 07.07.2026 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில், சட்டரீதியானதீர்வுகளைநாடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதையும், இதே கோரிக்கையுடன் ஏற்கனவே மேற்பார்வைக் குழுவிடம் மனு தாக்கல் செய்திருப்பதையும் அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோரின் குடும்பங்களுக்கு அரசின் நிவாரணம், கருணை அடிப்படையிலான பணி நியமனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு தமக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை என்றும், ஆனால் சி.பி.ஐ. விசாரணைக்கு உட்பட்ட அதே சம்பவத்தின் முக்கிய சாட்சிகளுக்கு வழங்கப்படும் நலன்கள் தொடர்பாக சாட்சிகளுடன் அரசு நிர்வாகம் நேரடியாக தொடர்பு கொள்வது, விசாரணையின் சுதந்திரம் மற்றும் நியாயத்தன்மை குறித்து நியாயமான ஐயத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், இவ்வழக்கின் சாட்சிகள் மீது இந்த நலத்திட்ட உதவிகளால் எந்தவித மான தாக்கமும் ஏற்படாத வகையில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேற்பார்வைக் குழுவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தமிழகத்தில் மேலும் 6 'போக்சோ' சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அனுமதி!

சென்னை, ஜூலை.11-

போக்சோ வழக்குகளை விரிவாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதன் ஒரு பகுதியாக கூடுதலாக 6 புதிய போக்சோ சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்து உள்ளது. தமிழகத்தில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் சுமார் 18,600க்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த நிலையில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை, விரைவாக விசாரிக்க உத்தரவிட கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்த போது, நீதிமன்ற தலைமைப் பதிவாளர் தரப்பில், அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில் நடப்பாண்டு ஜூன் 25ஆம் தேதி நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் சுமார் 18,675 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

போக்சோ சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைவாக விசாரிக்க விரைவில் தென்காசி, ஈரோடு, திருப்பூர், திருச்சி மற்றும் கள்ளக்குறிச்சியில் தலா ஒரு புதிய நீதிமன்றமும், சென்னையில் கூடுதலாக ஒரு போக்சோ சிறப்பு நீதிமன்றமும் என, மொத்தம் ஆறு நீதி மன்றங்கள் அமைக்கப்பட உள்ளதாக கூறப்பட்டு இருந்தது. அதே போல தற்போது செயல்பட்டு வரும் சிறப்பு நீதிமன்றங்களில் 4 நீதிபதி பணியிடங்கள் காலியாக இருப்பதும் அறிக்கையில் சுட்டி காட்டப்பட்டுள்ளது.

# சீனாவில் கடும் வெள்ளம்: 39 பேர் பலி; 1,30,000 பேர் வெளியேற்றம்!

நான்னிங்,ஜூலை.11-

சீனாவின் தெற்குப் பகுதியில் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கால் இதுவரை 39 பேர் பலியாகினர்.

'மேசாக்' புயல் காரணமாக பெய்து வரும் இத்தொடர் மழையால், சீனாவின் 62க்கும் மேற்பட்ட முக்கிய நதிகளில் வெள்ள நீர் அபாயக் கட்டத்தைக் கடந்து பாய்கிறது. இதையொட்டி, அப்பகுதியில் வசித்த 1,30,000 மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நான்னிங் நகரில் உள்ள அணை உடைந்ததில் 26 பேர் உயிரிழந்தனர். இதுவே பெரும்பாலான மரணங்களுக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது.

அதேபோல, தைவானின் தென் பகுதியில் பாவி புயல் காரணமாக கனமழை ஏற்பட்டு பல பகுதிகளில் நிலச்சரிவும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

சீனாவில் 5,700 படகுகள் மற்றும் டிரோன்கள் மீட்புப் பணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ள நிலையில் மீட்புப் படையினர் தீவிரமாகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குயிகாங் நகரில், பல பள்ளிகள் அமைந்துள்ள பகுதியில் சிக்கிய 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை மீட்புக் குழுவினர் இன்று மீட்டனர்.

சாலைகள் சீரமைக்கப்பட்டு வரும் வேளையில், 60,000க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

வெள்ள நீர் வடிந்து வருவதாகச் சொல்லப்படும் நிலையில் அடுத்த 2 நாள்களுக்கு பல இடங்களில் கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையங்கள் தெரிவித்துள்ளன.

### கொல்லம் – தாம்பரம் விரைவு ரயில்

# பாம்புக் கோவில் ரயில் நிலையத்தில் நின்று செல்ல அனுமதி!

## தென்காசி ராணிஸ்ரீகுமார் எம்.பி. கோரிக்கை ஏற்பு!

தென்காசி.ஜுலை.11–

கொல்லம் தாம்பரம் விரைவு வண்டி ரயில் எண்.(16101) தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீ குமார் கோரிக்கையை ஏற்று தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்திற்கு உட்பட்ட பாம்புகோயில் சந்தை ரயில் நிலையத்தில் நின்று செல்ல ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் யாதவ் அனுமதி வழங்கியுள்ளார். இது தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.



தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் யாதவ் அவர்களிடம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள இரயில்வே துறை சம்பந்தமாகவும், கொல்லம் முதல் தாம்பரம் வரை இயக்கப்படும் கொல்லம் விரைவு வண்டியை(16101) பாம்புக்கோவில் சந்தை இரயில் நிலையத்தில் நின்று செல்வது தொடர்பாகவும் மற்றும் கீழ்கண்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை 21.03.2025, 19.08.2025 & 19.12.2025 ஆகிய தேதிகளில் வழங்கி தொடர்ந்து வலியுறுத்தியதின் பலனாக முதற்கட்ட மாக கொல்லம் முதல் தாம்பரம் வரை இயக்கப்படும் கொல்லம் விரைவு வண்டி எண் (16101) பாம்புக்கோவில் சந்தை இரயில் நிலையத்தில் நின்று செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு வாய்ந்த அனுமதி வழங்கிய ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் நன்றி தெரிவித்துள்ளார். மேலும் இதர கோரிக்கைகள் அனைத்தும் விரைவில் பரிசீலினை செய்து நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அந்த கோரிக்கைளின் விபரம் வருமாறு.

1.செங்கோட்டை முதல் தாம்பரம் வரை செல்லும் சிலம்பு விரைவு இரயிலை (20681) தினசரி இயக்க வேண்டியும்.

2.16721 கோயம்புத்தூர் முதல் மதுரை வரை இயக்கப்படும இன்டெர் சிட்டி விரைவு ரயிலை செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டியும்.

3.செங்கோட்டை ரயில் நிலையத்தில் பயணத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கூடுதலாக புதியதாக 5 மற்றும் 6 ஆவது நடைமேடைகளை உருவாக்க வேண்டியும்.

4.இரயில் பெட்டி பராமரிப்பு பணிக்காக செங்கோட்டை ரயில் நிலையத்தில் புதிய பிட் லைன் அமைக்கப்படுகிறது. அதனின் செயல்பாட்டு திறனை மேம்படுத்த வேண்டியும்

5.முன்னர் மூடப்பட்டிருந்த சோழபுரம், கரிவலம்வந்தநல்லூர் மற்றும் நைனாகரம் (நிறுத்தம்) ஆகிய இரயில் நிலையத்தை மீண்டும் திறக்க புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியும்.

6. சென்னை எழும்பூர் முதல் செங்கோட்டை இடையே புதிய வந்தே பாரத் இரயில் சேவை அறிமுகப்படுத்தப்படுதல்.

7.ஈரோடு–செங்கோட்டை / செங்கோட்டை–ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து இயக்கப்படும் தொடர்வண் எண் 16845/16846 மேட்டூர் (MTE) தொடர்வண்டி நிலையத்தில் விரைவில் நிறுத்தப்பட்டு புறப்படுதல்.

மேற்கண்ட கோரிக்கைகளை விரைவில் செயல்படுத்த ஒன்றிய ரயில்வே துறை அமைச்சகத்திடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என கூறியுள்ளார்.

பாம்புக்கோவில் சந்தை இரயில் நிலையத்தில் கொல்லம் விரைவு இரயில் நிறுத்தத்திற்கான வரவேற்பு நிகழ்ச்சி நேற்று (10.07.2026) இரவு 7.55 மணியளவில் நடைபெற்றது.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம், பரசலூர் ஊராட்சியில் மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில், கிரிக்கெட் விளையாடுவதற்குத் தேவையான உபகரணங்களை மாணவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வழங்கினார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தர இயலாது:

# கர்நாடக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திட்டவட்டம்!

பெங்களூர், ஜூலை 11-

பருவமழை சரியாக பெய்யவில்லை என்பதால் அணைகளில் நீர் இல்லை. அதனால் தமிழகத்துக்கு தண்ணீர் தர இயலாது என்று கர்நாடக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி கூறினார்.

**நெல் சாகுபடி**

தமிழ்நாட்டில் சராசரியாக 52.72 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும், கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் நெற்பயிரே முதன்மையாக சாகுபடி செய்யப் படுகிறது. டெல்டா மாவட்டங்களில் ஆண்டுக்கு 20.65 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவைப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.14 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் (பகுதி), திருச்சி (பகுதி), அரியலூர் (பகுதி) ஆகிய டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்வதற்கு, மேட்டூர் அணை ஜூன் 12ந் தேதியன்று திறப்பது வழக்கமாகும். ஆனால் போதிய நீர் இல்லாததால் இந்த ஆண்டு மேட்டூர் அணையை திறக்கவில்லை.

**மேட்டூர் அணை**

எனவே, தமிழக அரசு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ரூ.77.50 கோடி மதிப்பில் குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்தது. தற்போது டெல்டா மாவட்டங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மூலம் 3.55 லட்சம் ஏக்கர் வரை சாகுபடி மேற்கொள்ள இயலும் என்பதால், விவசாயிகளுக்கு பலன் அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளது. அதற்கிடையில், தமிழக அரசு டெல்டா மாவட்டங்களில் எவ்வளவு பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது என்பதைக் கணக்கெடுத்து வருகிறது.

மேட்டூர் அணையின் முழு கொள்ளளவு 93 ஆயிரத்து 470 மில்லியன் கனஅடியாகும். கடந்த ஆண்டு இதே நாளில் அணை முழு கொள்ளளவை எட்டியிருந்தது. ஆனால் தற்போது 38 ஆயிரத்து 359 மில்லியன் கனஅடி நீர் மட்டுமே உள்ளது. ஒரே ஆண்டில் 55 ஆயிரத்து 111 மில்லியன் கனஅடி நீர் குறைந்துள்ளது. இருப்பினும், மேட்டூர் அணை திறக்கப்படுமா? என டெல்டா விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**கர்நாடக நிலைமை**

ஆனால் கர்நாடகாவில் இருந்து தண்ணீர் திறந்து விட்டால்தான் மேட்டூர் அணை நிரம்பும். அணை நிரம்பினால்தான் நீர் திறக்கப்படும் என்ற நிலையில் தமிழக அரசு உள்ளது. ஆனால் தற்போதைய சூழ் நிலையில் அது சாத்தியமா? என்றால். இயற்கையின் கையில்தான் அது இருக்கிறது. தற்போதைய நிலையில் மேட்டூர் அணைக்கு நீர் தரும் கர்நாடகாவின் கிருஷ்ணராஜ சாகர் அணை, கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய அணைகளில் 35.1 சதவீத நீர் மட்டுமே உள்ளது. கடந்த ஆண்டு 91.7 சதவீத நீர் இருந்தது. இந்த நான்கு அணைகளின் மொத்த கொள்ளளவு 1 லட்சத்து 14 ஆயிரத்து 571 மில்லியன் கனஅடியாகும். ஆனால் தற்போது 40 ஆயிரத்து 230 மில்லியன் கனஅடி நீர் மட்டுமே இருக்கிறது.

இந்த அணைகள் நிரம்ப வேண்டுமென்றால் சிறிய மழை போதாது. நீர்ப்பிடிப்பு பகுதி முழுவதும் 2 வாரங்களுக்கு சுமார் 400 முதல் 600 மில்லிமீட்டர் அளவுக்கு பரவலான மழை பெய்தால்தான் இந்த 4 அணைகளும் நிரம்பும் வாய்ப்பு உள்ளது.

**காவிரி மேலாண்மை வாரியம்**

ஆனால் காவிரி மேலாண்மை வாரிய உத்தரவுப்படி தமிழகத்திற்கு கர்நாடகம் ஜூன் மாதத்தில் 9.91 டி.எம்.சி. நீரும், இந்த (ஜூலை) மாதத்தில் 32 டி.எம்.சி. நீரும் தந்திருக்க வேண்டும். ஆனால் தரவில்லை.

இதுகுறித்து கர்நாடக நீர்ப்பாசனத்துறை மந்திரி ராமலிங்க ரெட்டி கூறியதாவது:

கர்நாடகாவில் போதிய மழை இல்லாததால் அணைகள் நிரம்பவில்லை. எனவே தமிழகத்துக்கு இப்போதைக்கு நீர் தர இயலாது. தமிழகத்திற்கு நீர் தர வேண்டும் என்று காவிரி மேலாண்மை வாரியமும் எங்களுக்கு உத்தரவிடவில்லை. ஏனென்றால் கர்நாடகாவில் நீர் இல்லை என்பது அவர்களுக்கே தெரியும். நீர் திறக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் இருந்து கோரிக்கை வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் தமிழகத்துக்கு இவ்வளவு நீர் கர்நாடகம் தர வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், எங்களிடம் தருவதற்கு போதிய நீர் இல்லை. எப்போது தமிழகத்துக்குநீர்திறக்கப்படும் என்று கேட்டால், அது மழை பெய்வதை வைத்து சொல்ல முடியும். இப்போது வரை நல்ல மழை பெய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வைரமுத்து

**ஜூலை 11 (2006)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் கழகப் பணியாற்ற தொடங்கி தேனி மாவட்டக் கழகம் பிரிக்கப்பட்டபோது, அம்மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்..

வடுகப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராக இரண்டு முறை பொறுப்பு வகித்தவர்.

வடுகப்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'இயக்கத்திற்கு ஒரு வைரமுத்துவையும், இலக்கியத்திற்கு ஒரு வைரமுத்துவையும் தந்த வடுகப்பட்டி' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# மதுரையில் த.வெ.க. ஆட்சியைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்!

## தனியார் நிறுவனத்திற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்தி முழக்கம்!

மதுரை, ஜூலை 11 -

த.வெ.க. ஆட்சியில் மதுரை மாநகராட்சியை கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் நேற்று முன்தினம் காலை போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.மதுரை மாநகராட்சியில் திடக் கழிவு களை மேலாண்மை செய்யும் பணி, தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக குப்பைக்கு பதில் மண் மற்றும் கற்களை அள்ளிச்சென்று எடைகாட்டுதல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளில் அந்த நிறுவனம் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. வரும் ஆகஸ்ட் மாதத்துடன் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தம் முடிவடைகிறது. இதனால், திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தனியார் நிறுவனம் சுணக்கம் காட்டி வருவதாக கூறப்படுகிறது.

இதனால், நகர் பகுதி முழுவதும் பல இடங்களில் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. வீடுகளிலும் தினசரி குப்பை சேகரிக்கும் நிலை மாறி, நான்கு நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே குப்பை சேகரிக்கப்படுகிறது. மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதிய பிடித்தம் உள்ளிட்ட நடவடிக்கைகளால் தனியார் நிறுவனம் ஈடுபட்டு குடைச்சல் கொடுத்து வருகிறது. இந்த நிலையில், மாநகராட்சி கமிஷனர் கவுரவ் குமார் ஒவ்வொரு தூய்மைப் பணியாளரும் தினமும் தலா 100 கிலோ வீதம் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை பிரித்து தர வேண்டும் என வாய்மொழி உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

இதைக் கண்டித்து சிஐடியு, வி.சி.க. உள்ளிட்ட அனைத்து மாநகராட்சி தொழிற்சங்கத்தினர் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் நேற்று காலை மாநகராட்சி அண்ணா மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அப்போது திடக்கழிவு மேலாண்மையில் தனியார் நிறுவனத்தி ற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் கோஷம் எழுப்பினர். இதையடுத்து தொழிற்சங்க நிர்வாகிகளை அழைத்து மாநகராட்சி கமிஷனர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனால், மாநகராட்சி அலுவலகம் முன் நேற்று முன்தினம் காலை பரபரப்பு ஏற்பட்டது.